STC .No. 145/2023
நாள் – 04.02.2026.

பு.சா.1 – திரு. சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு
எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )

(எதிரி ஆஜரில்லை. U/s.355 BNSS மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்).

எதிரி ஆட்சியர் அலுவலகத்தில் தற்காலிகமாக பணிபுரிகிறார். அங்கு சென்று வந்த போது பழக்கம். எதிரிக்கு தொகையை கடனாக கொடுத்தேன் என்றால் சரிதான். இதற்கு முன்பு கொடுக்கல் வாங்கல் இல்லை. நான் விஜயா பேங்கர்ஸ்சில் பாட்னர் என்றால் இல்லை. எதிரிக்கு கடனாக பணத்தை கொடுத்த போது வேறு ஆவணங்களை வாங்க வில்லை. காசோலை மட்டும் தான் வாங்கினேன். நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன். மேற்படி வருமான வரி அறிக்கையில் இந்த வழக்கு தொகை எவ்வாறு வந்தது என காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு தொகையை கடனாக கொடுக்கவில்லை என்றாலும் அதை வருமான வரிக்கணக்கில் காட்ட வில்லை என்றாலும் அதனால் தான் அதை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 05.07.2022 அன்று எதிரி கடனாக கேட்டார். அன்றைய தினமே பணத்தை கொடுத்துவிட்டேன். ரொக்கமாக கொடுத்தேன். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் ரொக்க பரிவர்த்தனை செய்யக்கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். 05.11.2022 அன்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். 07.11.2022 அன்று போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது. 29 நாட்கள் கழித்து வழக்கிறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 29 வது நாள் அனுப்பியதற்கு காரணம் ஏதும் உள்ளதா என்றால் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. அதை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி விஜயா பேங்கர்சில் வாங்கிய

கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலை எனவும் நான் விஜயா பேங்கர்சில் பங்கு தாரர் என்றாலும் அதை தவறாக பயன் படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. விஜயா பேங்கர்சின் பவர் ஏஜெண்ட் இவ்வழக்கு எதிரி மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S எண்.61/2023 என கடனுறுதி சீட்டு ஆவணத்தை வைத்து இவ்வழக்கின் இதே தொகைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த விவரம் தெரியாது. அவரே வழக்கு தாக்கல் செய்தால் வழக்கு பாதிக்கப்படும் என்பதால் என் மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் ஏதும் வாங்கவில்லை என்றாலும் அதற்கு ஆதரவாக காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சட்டப்படி செலுத்த வேண்டிய தொகை ஏதும் இல்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.02.04 18:15:02 +0530

Judicial Magistrate No.I
Dindigul.